262

உ

கணபதி துணை

புலோலிநகர்

# ஸ்ரீ பசுபதீசுரப் பெருமானுர் திருவூஞ்சல்

BIKAIPAKAN BEQUEST

இது

யாழ்ப்பாணத்து நல்லூர்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்**

இயற்றி அருளியது

அச்சுப்பதிப்பு:

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்,

யாழ்ப்பாணம்.

இ62
A24
PB

உ

குகமயம்

# பிரகடன வரலாறு

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பொன்னாருங் கதிர்காம மாத லத்துப்
    பொற்பாரு மெந்தைபணி போற்றி யேதான்
முன்னாரு நால்வருமோ ருருவ மெய்தி
    முன்றோன்றி யேதிகழு முறைமை யென்னத்
தென்னாரும் யாழ்ப்பாண நல்லூர் தன்னிற்
    சிறியேங்கள் சிவசமயந் தேரும் வண்ண
மந்நாளி லவதரித்த குரவ னாகு
    மாறுமுக நாவலனை யன்பு செய்வாம்.

ஆங்கவன்றான் புலோலிநக ரமல னாகு
    மப்பனையெம் மான்றனையே பாடு மூஞ்சல்
வீங்கியசொற் பொருள்வளத்த தெவர்தா மோரார்
    வினைவலிபோ மச்சினிலே தருவா யென்று
பாங்கியலு மாதளியின் றர்ம கர்த்தா
    பன்னுபுக ழிராமசாமிச் செட்டியார்தா
மீங்கருளும் பணியென்றன் சிரமேற் கொண்டே
    யியலச்சிற் றருவித்திங் கேய்வித் தேனால்.

STACKS
ARCHIVES

உ

சிவமயம்

# பரதெய்வ வணக்கம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சீர்பெற்ற புலோலிநகர்த் திருத்தளியிற் சிற்பரனுஞ்
சிவபி ரான்மே
லேர்பெற்ற வாறுமுக நாவலனு ரீங்கிசைத்த
வினிமை யூஞ்சல்
பார்பெற்ற வச்சினிலே பதித்தற்குப் பண்பில்லாப்
பாவி யேனுன்
பேர்பெற்ற கதிர்காம மாதலத்துஞ் சந்நிதியும்
பிறங்கு கோயில்.

வீற்றிருக்கும் பெருமானுர் விகசிதகஞ் சக்கழலை
விரும்பிப் போற்றி
யாற்றிருக்கும் புலோலிநக ரந்தளியி னமலபிரா
னடியைப் போற்றி
யேற்றிருக்குஞ் சிவபெருமா னடியார்க ளெவர்களுமே
யின்ப மார
ஆற்றிருக்கும் பவமுடையே னோங்காரத் தொருவரையே
யுன்னு கின்றேன்.

ஸ்ரீ கதிர்காம மகாக்ஷேத்திரம் வாழ்க.

திருச்சிற்றம்பலம் வாழ்க.

---

உ

சிவமயம்

புலோலி நகர்

## ஸ்ரீ பசுபதீசுரப் பெருமானுர்

# திருவூஞ்சல்

---

### விநாயகர் காப்பு

* சீர்பூத்த மலரயன்மா விமையோர் போற்றுந்
திறம்பூத்த புலோலியில்வாழ் சிவனுர் கொன்றைத்
தார்பூத்த சடையர்பசு பதியார் மீது
தமிழ்பூத்த வூஞ்சலிசை தமியேன் பாட
ஏர்பூத்த மறைமுதலி னிலகுந் தெய்வ
மியல்பூத்த பிரணவமா யினிது மேவுங்
கார்பூத்த கரடதட விகடகும்பக்
கயமுகவ னிருசரணங் காப்ப தாமே.

### நூல்

நலமோங்கு நாதவிந்து கால்க ளாக
நயனேங்கு சத்தி யொளிர் விட்ட மாக
நிலமோங்கு மந்திரநூ விழைய தாக
நிகமோங்கு மறைநான்குங் கயிற தாகப்
பலமோங்கு முபநிடதம் பலகை யாகப்
பரமோங்கும் பிரணவம்பொற் பீட மாகப்
புலமோங்கு கலைவாணர் புகழ்ந்து பாடும்
புலோலிநகர்ப் பசுபதியே யாடி ரூஞ்சல். க

---

* இத் திருவூஞ்சலிலுள்ள கவிகள் பதினென்றினும் முதலிரு சீர்களும் ஐந்தாஞ் சீரும் ஆறும் சீரும் மூவசையாக மற்றைய நான்கு சீரும் ஈரசையாகிவந்த சந்தம் நிறைந்த எண்சீர்க் கழி நெடிலடியாசிரிய விருத்தம். இதனைச் சுன்னுகம் ஸ்ரீமான் அ. குமாரசுவாமிப் புலவரவர்களாற் புதுக்கப்பட்ட காரிகை யுரை ருகூ-ம் பக்கத்துங் காண்க.

காமருவு மிமையவர்பொன் மலர்கள் வீழக்
கணமருவும் பூதரிரு மருங்குஞ் சூழ
மாமருவு மருமனயன் முதலோர் தாழ
வரமருவு மருளடியர் மலங்கள் போழத்
தேமருவு தரிசனத்தின் மனஞ்சென் றாழத்
திடமருவு சிற்சுகம்பெற் றினிது வாழப்
பூமருவு மளியிசைகொள் பொழில்கள் சூழும்
புலோலிநகர்ப் பசுபதியே யாடி ரூஞ்சல். ௨

கணந்திகழுங் கின்னரர்கள் சுருதி கூடக்
கவின்றிகழு மலர்ப்பிரமன் றாளம் போட
இனந்திகழு மரமகளிர் நடன மாட
இசைதிகழுந் தும்புருநா ரதர்பண் பாட
மனந்திகழு மன்பர்பெறு மிடர்க ளோட
மறைதிகழும் பேரொலியெத் திசையு நீடப்
புனந்திகழும் வள்ளிமண வாளர் போற்றும்
புலோலிநகர்ப் பசுபதியே யாடி ரூஞ்சல். ௩

வரஞ்சிறக்குந் திருத்தொண்ட ரன்பு கூர
மலர்சிறக்குங் கரங்கள்சிர மீது சேரத்
திரஞ்சிறக்கு மானந்த வருவி சோரச்
சிவஞ்சிறக்கும் பெருஞானந் திகழ்ந்து சாரப்
பரஞ்சிறக்கும் பருவதவர்த் தனிபங் காரப்
பரஞ்சிறக்கும் பாடல்கவி வாணர் தேரப்
புறஞ்சிறக்கு மியாழ்ப்பாண மதனி லோங்கும்
புலோலிநகர்ப் பசுபதியே யாடி ரூஞ்சல். ௪

மின்னியலுஞ் சடிலநதி மாது வீற
மிசையியலு முடிமீது மலர்க ளேறக்
கொன்னியலும் படகமொடு துடிவிண் பீறக்
குணமியலு முனிவரர்வாழ்த் தொலிகள் கூறத்
தென்னியலுங் களபசுகந் தாதி நாறச்
செயலியலுஞ் சிறியனிரு வினைகள் பாறப்
பொன்னியலு மமருலகும் பொருவ மேவும்
புலோலிநகர்ப் பசுபதியே யாடி ரூஞ்சல். ௫

STACKS

சடைவிளங்குங் கடுக்கைநிலா மதிய மாடத்
தாள்விளங்குஞ் சிலம்புகலின் கலினென் றூட
இடைவிளங்கு மணியரவக் கச்சு மாட
எழில்விளங்குஞ் சூலமெழு மான்கை யாட
உடைவிளங்குங் கொலைப்புலியி னதளு மாட
உரம்விளங்கு மெஞ்ஞோப வீத மாடப்
புடைவிளங்கு நவமணிமா டங்க ளோங்கும்
புலோலிநகர்ப் பசுபதியே யாடி ரூஞ்சல். ௬

கயலுலவு விழியுமையம் பிகையா ணேச
கவினுலவு மிரசதகை லாச வாச
மயலுலவு மலமாதி பாச நாச
மதியுலவு மடியருள மாவி லாச
அயலுலவுந் திருநந்தி தொழுமுல் லாச
அருளுலவுங் கணேசனைத்தந் தருளுந் தேச
புயலுலவுஞ் சிகரவணி பொலிந்து மேவும்
புலோலி நகர்ப் பசுபதியே யாடி ரூஞ்சல். ௭

காதமருங் குழையவரே யாடி ரூஞ்சல்
கரத்தமரு முழையவரே யாடி ரூஞ்சல்
சீதமரு மதலையரே யாடி ரூஞ்சல்
சிலையமரும் பதலையரே யாடி ரூஞ்சல்
சேதமரு மிறையவரே யாடி ரூஞ்சல்
இடமருவு மறையவரே யாடி ரூஞ்சல்
போதமருந் தடங்கள்பல புடைசூழ் கின்ற
புலோலிநகர்ப் பசுபதியே யாடி ரூஞ்சல். ௮

அறமிலங்குந் தயாநிதியே யாடி ரூஞ்சல்
அருளிலங்கும் பசுபதியே யாடி ரூஞ்சல்
நிறமிலங்குஞ் செய்யவரே யாடி ரூஞ்சல்
நினைவிலங்குந் துய்யவரே யாடி ரூஞ்சல்
மறமிலங்கும் படையவரே யாடி ரூஞ்சல்
மதியிலங்குஞ் சடையவரே யாடி ரூஞ்சல்
புறமிலங்குங் கடலலைபன் மணிகள் வீசும்
புலோலிநகர்ப் பசுபதியே யாடி ரூஞ்சல் ௯

அற்பாருந் திருவருளைந் தெழுத்து வாழி
அணியாரு மக்கமணி பூதி வாழி
வற்பாரு மறையுடனு கமங்கள் வாழி
மகிழ்வாருஞ் சைவமத சபையார் வாழி
கற்பாரும் மகளிர்பசு வினங்கள் வாழி
கவினுரு மரசர்முகில் மறையோர் வாழி
பொற்பாரும் பருவதவர்த் தனியார் வாழி
புலோலிநகர்ப் பசுபதியார் வாழி வாழி. க0

புலோலிநகர் ஸ்ரீ பசுபதீசுரப் பெருமானுர்

திருவூஞ்சல் முற்றிற்று.